# சிலுவையின் பாதையில்



"என்னைப் பின்செல்ல விரும்புகிறவன்,
தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச்
சுமந்துகொண்டு என்னைப் பின்தொடரட்டும்."
(மத்.16:24)

சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்
தமிழ் குழு

எங்கே சுமந்து போறீர்? சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர்
பொங்கும் பகைவராலே, அங்கம் நடு நடுங்க எங்கே போறீர்

1. மனித பாவத்தாலே, மரணத்தீர்வை பெற்று
தூய செம்மறிபோலே, துக்கத்துடன் வருந்தி எங்கே போறீர்

2. பாரச்சிலுவை மரம், பாவத்தின் சுமை தாங்கி
பாசத்துடன் அணைத்து, பாரத்துடன் நடந்து எங்கே போறீர்

3. கல்வாரி மலை நாடி, தள்ளாடி தரை வீழ்ந்து
எல்லோரின் பாவங்களை, தனிமையால் சுமந்து எங்கே போறீர்

4. மாமரி கன்னி அன்னை, மகனின் கோலங்கண்டு
மாதுயருடன் வாடி, மனம் நொந்து வருந்த எங்கே போறீர்

5. உதிரம் ஆறாய் சிந்தி, உள்ள உரமிழந்து
சீரேன் சீமோன் துணையை, ஏற்று வழி நடந்து எங்கே போறீர்

6. கர்த்தரே உம் வதனம், இரத்தக் கறையால் மங்கி
உத்தமி வெராணிக்காள், வெண் துகிலால் துடைத்தும் எங்கே போறீர்

7. பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த, பாரச் சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும் வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்

8. புண்ணிய ஸ்தீரிகள் பலர், புலம்பி அழும் வேளை
ஆறுதல் கூறி நீரும், நேசக்கண்ணீர் சொரிந்து எங்கே போறீர்

9. சிலுவை பாரத்தாலே, மாமரி ஏகமைந்தன்
மூன்றாம் முறை தரையில், முகம் படிந்தெழுந்தும் எங்கே போறீர்

10 நீடாடை கழற்றவே, கோடாகோடிக் காயங்கள்
இரத்தம் ஆறாய் பெருகி, வேதனையால் வருந்தி எங்கே போகிறீர்

11 நீட்டிய கால் கரத்தில், நீண்ட இரும்பாணிகள்
நிஷ்ட யூதர் அறைந்தும், நேசத்திலே வெந்து பலி-யாகினீர்

12 சிலுவை பீடமேறி, மும்மணி நேரந் தொங்கி
அரிய பிதாவை வேண்டி, ஆருயிர் ஒப்படைத்து பலி-யாகினீர்

13 மரி தாய் மடிமீதில், மரித்த மகன் தாங்கி
ஏழு சோக வாட்களால், ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்

14 கர்த்தரின் உடல்தனை, கல்லறைக்குள் அடக்கி
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து எப்போ வருவீர்

15 கல்லறைக்குள் அடங்கா, இறைவனின் மைந்தனே,
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.

# <u>சிலுவைப்பாதை</u>

*இறை திருவுளம் முற்றும் நிறைவேறிய...*
*இறைமகனின் முழுமையான பாதை...*

*கி.மு. வாழ்ந்த ... கி.பி. வாழ்கின்ற...*
*மனிதத்தின் மெசியா நடந்த பாதை...*

*வாழ்வு தரும் நீரைத் தர...*
*வறண்டு... துவண்டு... தாகத்தின் உச்சத்தை தன்னிலே ஏற்று...*
*தந்தையின் அன்பை.. தரணிக்கு காட்டி...*

*சிந்திய திரு இரத்தத்தை தன்னிடம் ஒன்றும் வைக்காமல்*
*தீட்டிய ஈட்டி இதயம் பாய ...கடைசி துளி இரத்தமும் நீரும்*
*என் மேல் விழ , என் பாவம் போக்க*
*என்னை கல்வாரிக்கு அழைக்கும் ...*
*என் இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்...*
*என்றும் எப்போதும்...*
*என் இயேசுவின் சிலுவையே என் வாழ்வாக்குவேன்...*
*இன்றும் .. நித்தியமும்...*

*இது இறை வார்த்தையின் விடுதலை பாதை....*
*புது உலகம் படைக்கும் இயேசுவின் பயணம்....*



**முதல் நிலை - இயேசு தீர்ப்பிடப்படுகிறார்**

**நடுவர் குற்றவாளி கூண்டில்.... குற்றவாளி நடுவர் நாற்காலியில்**

மற்றவர் குற்றவாளி என தீர்ப்பிடும் நான் எனக்கே தண்டனை தீர்ப்பு அளிக்கிறேன். ஏனெனில் தீர்ப்பை பெறுவதற்கு உரிய தவறான, பாவமான செயல்களை நானே செய்கின்றேன். கடவுள் ஒரு போதும், ஒரு நொடியேனும் ஆள் பார்த்து செயல் படுவதில்லை. ஆனால் நானோ?

என் உள்ளத்தில் மறைந்து இருபவற்றை குறித்து கிறிஸ்து இயேசு வழியாக தீர்பளிக்கும் நாளில் நான் என்ன ஆவேன்? என் வாழ்வில் வெளி தோற்றம் கொண்டு நான் மற்றவர் முன் நன் மதிப்பும் பெருமையும் பெற்று நல்லவன் போல வலம் வருகின்றேன். ஆனால் என் உள்ளத்தின் ஆழத்தில் உள்ள பாவங்கள், அசுத்தங்கள், தவறுகள், யாருக்கும் தெரியாது என மறைவாயுள்ளவைகள் ஒரு நாள், தீர்ப்பு நாளில் வெளியாகுமே! மற்றவரை தீர்பிட்ட நான் மிக பெரும் தண்டனை பெறுவேனே!

நான் ஒரு குற்றவாளியாய் இருக்க, என் கண்ணில் உள்ள மரக்கட்டையை பாராமல் மற்றவர் கண்ணில் இருக்கும் சிறு துரும்பை அல்லவா நான் கூர்ந்து கவனித்தேன். கடவுள் நடுவர் இருக்கை முன் நிறுத்தப்படும் போது நான் என்னை குறித்தே கடவுளுக்கு கணக்கு கொடுக்க வேண்டும்.

ஆகவே இனி நான் மற்றவர்க்கு தடை கல்லாய் இருக்க மாட்டேன்.

எனவே என் தவறுகளுக்காக, என் பாவத்திற்காக, பிலாத்துவின் முன் கட்டி இழுத்து வரப்பட்ட இயேசுவை நோக்குவேன். நான் நிற்கவேண்டிய இடத்தில் எனக்கு பதிலாய் இயேசு நிற்கிறார். என் குற்றத்தை இயேசு ஆண்டவர் தன் மேல் ஏற்று கொண்டதால் பரபாவாகிய நான் விடுதலை பெற்றேன்.

**இரண்டாம் நிலை - இயேசு சிலுவை சுமக்கிறார்.**

**என் சுமை ...அவர் சுமையானது.**

இயேசு சிலுவையை தாமே சுமந்து கொண்டு கொல்கொதா எனப்படும் இடத்திற்கு சென்றார். கலப்பையில் கை வைத்தப்பின் திரும்பி பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்பட தகுதியற்றவர் என்று கூறிய ஆண்டவர், மிகுந்த வேதனையோடு, என் பாவத்தை சுமந்து, உலகிலுள்ள எல்லோரின் மீறுதல்களை, கீழ்படியாமையை, தன் மேல் ஏற்று, எனக்கு இளைபாறுதல் தர அவர் சுமை தாங்கியாய் மாறுகிறார். இந்த பாரம் சுமந்த இயேசுவை நான் நோக்குவேன்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே எனது துன்பத்தை இயேசு சுமந்தார். என் பிணிகளை மெய்யாகவே தாங்கி கொண்டார். இன்று என் வாழ்வில் எதிர்கொள்ளும் பாடுகள் என்னை அழுத்தாது. அவை என்னை சோர்விற்கு உள்ளாக்க முடியாது. காரணம் என் ஆண்டவர் அவற்றை ஏற்கனவே சுமந்து விட்டார். இந்த இயேசுவை நான் விசுவசித்து என் கைகளை விரித்து கொடுப்பேன். அவரையே பின் தொடர்வேன். சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகிறவருக்கு மடமை. ஆனால் மீட்பு பெறும் எனக்கோ அது கடவுளின் வல்லமை. சிலுவையின் வழியே நிறைவாழ்வு. இந்த மீட்பருக்காக அனுதின சிலுவையை மன மகிழ்ச்சியோடு சுமந்து செல்வேன். இயேசு ஆண்டவர் என் துன்பங்களை மகிழ்ச்சியோடு சுமப்பதனால் நான் இன்று என் வாழ்வின் பாடுகளை அவரோடு சேர்ந்து சுமக்கிறேன்.

சிலுவை நாயகரின் அளவில்லா அன்பு, இரக்கத்தின் இதயம் என் சுமையை எளிதாக்கும். இயேசு என்னோடு இருக்கிறார். அவர் அருள் எனக்கு போதும். என் வலுவின்மையில் தான் அவரது வல்லமை நிறைவாக வெளிப்படும். ஆகவே என் வலுவின்மையில், நெருக்கடியில், இடரில், இன்னலில், இயேசுவின் கல்வாரி அன்பை முன்னிட்டு அகமகிழ்கிறேன். இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயல்வேன். சிலுவை வழியே நிறை சந்தோஷத்தின் வழி.

**<u>மூன்றாம் நிலை - இயேசு முதல் முறை கீழே விழுகிறார்.</u>**

**<u>முதல் வீழ்ச்சி ... இயேசுவினால் மீண்டும் எழுச்சி</u>**

*அந்த மரம் உண்பதற்கு களிப்பூட்டுவதாகவும், அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததை கண்டு முதல் முறை விழுந்த எனக்காக இங்கே இயேசு விழுகிறார். நான் செய்த பாவம் என்னை குத்துகிறது. மென்காற்று வீசும் பொழுதுகள் எனக்கு அனல் காற்றாய் மாறிற்று. என் ஆண்டவரின் குரல் எனக்கு அச்சத்தை கொடுப்பதாக மாறியது. என் பாவம் என்னை ஏமாற்றியது. நான் விழுந்து கிடக்கிறேன்.*

*கண்களுக்கு களிப்பூட்டிய, மனசான்றை மழுங்கடித்த, வாழ்வு முறை இன்று என்னை வேதனைப் படுத்துகிறது. ஆகவே தான் என் மீட்பரே எனக்காக என் பாவ பாரத்தால் விழுந்து என்னை தூக்க எழுந்தார்.*

*விழுந்து போன மனிதத்திற்காக விழுந்து எழுந்து இறை சித்தம் நிறைவேற்ற புறப்டுகிறார். இதுவே ஊதாரி மைந்தனான என்னை அறிவு தெளிவு பெற செய்தது. நான் இனி பஞ்சத்தில், வறுமையில், பன்றிகள் மத்தியில் வாழ தேவை இல்லை. நான் எழுந்து என் தந்தையிடம் செல்வேன். என் தந்தையாம் ஆண்டவர் அன்பில், கருணையில், மன்னிப்பில், மீட்பில் மிக பெரும் செல்வந்தர். என் அப்பா என்னை மன்னிப்பார்.*

*இனி நான் பாவத்தில் விழ மாட்டேன். ஒளிக்கும் இருளுக்கும் இனி சம்பந்தம் ஏது? கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் என்ன உடன்பாடு? பாவ சூழல்களில் இருந்து வெளியேறுவேன். எழுந்து நடப்பேன் தந்தை இல்லம் நோக்கி.*

**<u>நான்காம் நிலை - இயேசு தன் தாயை சந்திக்கிறார்.</u>**

**<u>தாயின் சந்திப்பு... ஆறுதலின் மணித்துளிகள்</u>**

*ஆண்டவருக்கு மிகவும் ஆறுதல் தந்த சந்திப்பு இது. எனது நேரம் இன்னும் வரவில்லை என்று மூன்று வருடங்களுக்கு முன்பு சொன்னார். இதோ இப்போது அந்த நேரம் வந்தது. தண்ணீர் திராட்சை ரசமாய் மாறியது அன்று. திராட்சை ரசம், பிழியப்பட்டு இரத்தமாய் சிந்தபடுகிறது இன்று. மனுமக்களின் பாவத்திற்காக தன் மகன் இருக்கும் நிலையை பார்த்து வியாகுலம் அவளை சூழ்ந்து கொள்கிறது. இதற்காக தானே ஆண்டவர் வந்தார். இதற்காக தானே 34 ஆண்டுகளுக்கு முன்பு உம் சொற்படி ஆகட்டும் என்று சொன்னாள்.*

*பாவத்தின் கொடுக்கை முறியடிக்க, உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும் என்று சாத்தானின் செயல்களை தோற்கடிக்க கடவுளாம் வல்லவர் ஏதேன் தோட்டத்தில் முன்னுரைத்தவை இன்று கல்வாரியில் நிகழ போகிறது.*

*என் பாவத்தால் உடைந்து தள்ளாடும் இயேசுவை பார்த்து மரியாவின் உள்ளத்தில் பாரம். அவள் இயேசுவின் தாயாக மட்டும் இருந்தால் நிச்சயம் இயேசுவை காப்பாற்றி இருப்பாள். ஆனால் அவள் என் தாயாக மாறி இருப்பதால், என் பாவ விமோசனம், என் ஆத்தும மீட்பு, என் நிறை வாழ்வு இயேசுவின் சிலுவை பாடுகளில் தான் உள்ளது என்பதை உணர்ந்தாள். இயேசு வழியாக, இயேசுவோடு, இயேசுவில் தந்தையாம் கடவுளுக்கு தன்னை காணிக்கையாக்கி விசுவாச பயணம் வருகிறாள். என் பிள்ளைகள் மீட்பு பெற என் மகனின் இரத்தம் சிந்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்த கல்வாரி பாதையில் பயணித்த ஒரே ஆத்துமம் அவள் தான்.*

*உள்ளத்தில் வாள் ஊடுருவினாலும், அவள் நம்பிக்கை தளரவில்லை. ஏதேன் தோட்ட சாபம் முடிவு பெற புதிய ஏவாளாக சிலுவை பயணம் பயணிக்கிறாள்.*

**<u>ஐந்தாம் நிலை - இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்.</u>**
**<u>தோள் கொடுத்த சீமோன்... வேதனையில் தோழன்.</u>**

*கள்வர் கையில் அகப்பட்டு, குற்றுயிராய் விடப்பட்ட மனிதன் மேல் பரிவு கொண்டு அவரை அணுகி, காயங்களில் திராட்சை ரசமும் எண்ணையும் வார்த்து, கட்டி, தான் பயணம் செய்த விலங்கின் மேல் ஏற்றி, ஒரு சாவடிக்கு கொண்டு போய் கவனித்த நல்ல சமாரியன் இதோ இங்கு.. ஏசுவிற்கு தோள் கொடுத்த சீரேன் ஊரை சேர்ந்த சீமோனாக.*

*சீமோன் இயேசுவின் சிலுவையை தாங்குகிறார். கரம் கொடுக்கிறார். நானும் மன வலிமை கொண்டு வலுவற்றவரின் குறை பாடுகளை தாங்கி கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவர் ஏழைகளுக்காக வாரி வாரி வழங்கும் போது அவரது நீதி என்றென்றும் நிலைக்கும் என்று மறைநூல் கூறுகின்றது. பிறருக்கு ஒரு கிண்ணம் நீரை கொடுக்கும் போது அது அவருக்கே கொடுப்பது தானே...எனவே நான் ஆள் பார்த்து செயல் படாமல் உதவி செய்வேன்.*

*பொன் மோதிரமும், பளபளப்பான ஆடையும் அணிந்தவரை வரவேற்று, அழுக்கு கந்தையணிந்த ஏழை ஒருவரை ஒதுக்கினால் என்னில் மனிதம் இல்லை. இறைவனின் மக்கள் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்க செய்ய வேண்டுமே. நான் மற்றவருக்கு அன்பை தர கடமை பட்டிருக்கிறேன். பிறருக்கு உதவி செய்யும் போது நான் அரசராம் ஏசுவுக்கே செய்கிறேன். நானும் ஏசுவுக்கு தோள் கொடுக்கும் சீமோன் போல் மாறுவேன். கட்டாயத்தால் அல்ல. இன்முகமாய் மன மலர்ச்சியோடு.*

## ஆறாம் நிலை - வெரோனிக்கா இயேசுவின் முகத்தை துடைக்கிறார்

## இறை சாயல்.... ஒரு வெள்ளை துணியில்.....

*வெரோனிக்கா எத்துனை இயேசுவை நேசித்து இருப்பார். தன் உயிரையும், தன் பாதுகாப்பையும், மற்றவர் என்ன கூறுவர் என்றெல்லாம் நினைக்காமல் இயேசுவின் திருமுகத்தை, துடைத்தாள். ஆனால் அந்த முகம் திருமுகமாக அழகின் முகமாக, ஒளியின் முகமாக இல்லை. இரத்தமும், பிட்கப்பட்ட, உடைக்கப்பட்ட சதையும், எலும்பும் தான் இருந்தது. கண்களெல்லாம் இரத்தம். முகம் முழுவதும் படைவீரர் துப்பிய எச்சில். தூசி படிந்த நிலை.*

*கதிரவனை போல ஒளிர்ந்த முகம் அது. இன்று ரத்தத்தால் மூடப்பட்டுள்ளது. நாம் பார்ப்பதர்கேற்ற அமைப்போ அவருக்கில்லை. நாம் விரும்பத்தக்க தோற்றமும் அவருக்கில்லை. வேதனையுற்று நோயுற்று நலிந்து காணப்பட்டார். காண முடியா பேரொளியில் வாழும் அவர் என் பாவத்தை சுமந்ததால், என் பிணியை தாங்கியதால், தன் அழகெல்லாம் இழந்து, வல்லமையை இழந்து, தன் தேவ சாயலை இழந்து நிற்கிறார்.*

*இறை சாயலை மீண்டும் தர, பாவத்தால் நான் இழந்த பரிசுத்த சாயலை மீண்டும் எனக்கு தர அவர் தன் மகிமையை இழந்தார். என்னை உண்டாக்கியவரின் சாயலுக்கு ஏற்ப நான் புதிப்பிக்கப்பட வேண்டும். அப்போது வெரோனிக்கா தன் துணியில் இயேசுவின் சாயலை பெற்றது போல, நான் என் இதயத்தில், என் வாழ்வு பரிவு, இரக்கம், நல்லெண்ணம், கனிவு ஆகியவற்றால் அணி செய்ய பெறுவேன். புது இயல்பு பெற்று கிறிஸ்துவின் சாயல் என்னில் உருவாகும். நான் வெரோனிக்கா போல என்னில் தேவ சாயலை பெறுவேன்.*

**ஏழாம் நிலை - இயேசு இராண்டாம் முறை தரையில் விழுகிறார்.**

**இரண்டாம் முறை.... நான் மீண்டும் எழ**

*ஊதாரி மகன் ஒருமுறை தான் விழுந்தான். அறிவு தெளிந்து தந்தையிடம் சென்றான். அனால் நானோ மீண்டும் மீண்டும் தீய வாழ்வை வாழ்கிறேனே. எந்தெந்த பாவங்களை அறிக்கை செய்து விட்டு விடுகிறேன் என்று உறுதியான பிரதிக்கினை செய்தேனோ அவற்றையே மீண்டும் செய்கிறேன். எனவே தான் என் ஆண்டவர் என் பலவீனதிற்காக மீண்டும் இரண்டாம் முறையாக கீழே விழுகிறார். மனம் ஆர்வம் உடையதாய் இருந்தும், உடல் வலுவற்று போக, சோதனைக்கு உள்ளாகி போகிறேன். என் இறை உறவு துவண்டு போவதால் ஆழ் துயரம் கொண்டு இயேசு எனக்காக முகம் குப்புற விழுகிறார்.*

*என் ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுவை அறிந்தபின், உலகத்தின், பாவத்தின், சத்துருவின் அழிவு சக்திகளிலிருந்து வெளியேறிய பின் மீண்டும் அவற்றில் சிக்கி கொண்டால், என் பின்னைய நிலைமை முன்னைய நிலையை விட கேடு மிக்கதாய் இருக்கும். மெய் ஜோதியாம் இயேசுவை அனுபவித்த பின் மீண்டும் இருளுக்கு, அசுத்தத்திற்கு நான் எப்படி செல்ல துணிந்தேன்? புயலால் அடித்து செல்லப்படும் மேகமாய் நான் இருக்க போவது இல்லை. இனி அழிவிற்கு அடிமையாய் இருக்க மாட்டேன். ஆண்டவரின் வார்த்தையில் ஆழமாய் தோண்டி, இயேசு என்னும் பாறை மீது அடித்தளம் அமைத்து, என் வாழ்வு என்னும் வீடு கட்டுவேன். வெள்ளம் போல சாத்தான் ஆறாக பெருக்கெடுத்து வந்தாலும் என் தூய வாழ்வை, என் விசுவாச வாழ்வை அசைக்க முடியாது. விழுந்து கிடக்கும் நான் இனி ஒரு நாளும் விழ போவது இல்லை.*

**<u>எட்டாம் நிலை - இயேசு எருசலேம் நகர பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.</u>**

**<u>யாருக்காக அழ.... இயேசுவுக்காக அல்ல..</u>**

*உருக்குலைந்து வேதனையோடு கல்வாரி ஏறுகிறார். இதை கண்ட சில கண்கள் கண்ணீர் விட்டன. அன்றொரு நாள் பாவியான ஒரு பெண்மணி இயேசுவின் காலடிகளை தன் கண்ணீரால் நனைத்தாள். அவள் பல பல பாவங்கள் செய்திருந்தாள். ஆனால் அவை எல்லாம் தள்ளுபடி செய்ததால், அவள் தன் தலைவனாம் யேசுவிடம் மிகுந்த அன்பு கொண்டு தன் தாழ்நிலை எண்ணி உணர்ந்து அழுதாள். பாதத்தையே கண்ணீரால் நனைத்தாள். மிகுதியாக மன்னிப்பு பெற்றாள். கண்ணீர் வீணாவது இல்லை. காரணம் அவர் தன் தோறப்பையில் என் கண்ணீர் துளிகளை சேர்த்து வைத்து இருக்கிறார். எனக்காக என் மக்களுக்காக என் தலை தண்ணீரால் நிறைந்ததாயும், என் கண்கள் கண்ணீரின் ஊற்றாகவும் இருக்க விரும்புகிறேன்.*

*ஆண்டவர் என்னிடம் விரும்புவது உண்மையான ஆழ்ந்த மனஸ்தாப கண்ணீர். என் இயேசு நான் மனம் மாறவே , ஒலிவ மலையில் கண்ணீர் விட்டு அழுதார். நான் பாவ, சாப, கல்லறையில் இருந்து வெளியே வரவே என் இயேசு கண்ணீர் விட்டு அழுதார். கோழி தன் குஞ்சுகளை தன் இறக்கைகளுக்குள் கூட்டி சேர்ப்பது போல என் ஆண்டவர் என்னை அரவணைக்க கண்ணீர் விட்டு புலம்பினார். என் இயேசுவின் பாதத்தில் நான் விழுந்து கண்ணீர் சிந்தி அழுது பாவ மன்னிப்பு பெறுவேன். ஆண்டவரிடம் திரும்பி வருவேன். புது வாழ்வு பெறுவேன். கடவுளே என் கண்ணீர் யாவற்றையும் துடைத்து விடுவார்.*

**ஒன்பதாம் நிலை - இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.**

**மூன்றாம் வீழ்ச்சி.....லட்சிய பாதையின் பயிற்சி.**

இலக்கு என்று ஒன்று உண்டெனில் தடைகள் கோடி வந்தாலும் மனம் தளர்ந்து ஒரே இடத்தில் விழுந்து விடாது.

நான் சோர்ந்து போய், திசை தவறி போய், பாதை தொலைப்பது, எனக்கு சரியான இலக்கு இல்லாமல் போவதால் தான். இயேசு கிறிஸ்து என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேறுவதற்காக தொடர்ந்து நான் ஓட வேண்டும். அந்த நிறைவான லட்சியத்திற்கு தடைகள் கோடி வந்தாலும், சோர்வுகள் தோன்றினாலும், வீழ்ச்சிகள் என்னை தாழ்த்தினும், கடந்ததை மறந்து விட்டு முன்னிருப்பதை கண் முன் கொண்டு, பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன். கிறிஸ்து இயேசுவின் வழியாக கடவுள் எனக்கு மேலிருந்து விடுக்கும் அழைப்பே அந்த பரிசு. இயேசு தன் வாழ்வில் ஒரு லட்சியம் கொண்டிருந்தார். என்னை அனுப்பினவரின் விருப்பத்தை செய்வதே என் குறிக்கோள் என கூறி அதையே ஒவ்வொரு நாளின் நிகழ்வாக மாற்றினார்.

கல்வாரி பயணத்தில் மூன்றாம் முறை முகம் குப்புற தரையில் விழுகின்றார். ஆனால் தன் குறிக்கோளாம் இறை தந்தையின் திருவுளம் நிறைவேற்ற மீண்டும் புறப்படுகிறார். இலக்கை தொலைத்து, மாலை நேர இருள் சூழ்ந்து, பாதை மாறிய எம்மாவு சீடர்களுக்கு வழிப்போக்கனாய் இயேசு நடந்து அவர்கள் கண்கள் திறக்க செய்து பாதை உணர செய்தார். என் வாழ்வு என்னும் வழியில் அவரே பாதையை காட்டும் மன்னா. என் இலக்கு அடைய, என் சக்தியாக, என் வலிமையாக, நற்கருணையாக இயேசு வருகின்றார். இயேசுவை நான் நற்கருணை ரூபத்தில் பெற்று என் பயணம் தொடர்கிறேன். மூன்றாம் முறை விழுந்தாலும் ஒப்புரவு என்னும் அருட்சாதனத்தில் கண் திறக்கப்பட்டு, நற்கருணையில் இயேசுவை பெற்று தொடர்ந்து லட்சிய பயணம் செல்வேன்.

**<u>பத்தாம் நிலை - இயேசுவின் ஆடைகளை களைகிறார்கள்.</u>**

**<u>பாவ ஆடையை களைந்து ... தூய ஆடையை அணிந்து கொள்ள...</u>**

*முதல் மனிதர்கள் கடவுள் கட்டளையை மீறிய பின் தங்கள் பாவ நிலையை உணர்ந்தார்கள். தங்களை தாங்களே மீட்க, பாதுகாக்க எண்ணினார்கள். ஆகவே அத்தி இலைகளைத் தைத்து தங்களுக்கு ஆடைகளை செய்து கொண்டார்கள். இலைகளால் உண்டாக்கிய உடை எத்தனை நாள் தாங்கும்? சூரிய ஒளி பட பட அது காய்ந்து வதங்கி போகுமே. இது தான் மனிதனின் சுய முயற்சி, சுய சக்தி. ஆகவே ஆண்டவராம் கடவுள் மனிதனுக்கு தோல் ஆடைகளை செய்து அவர்கள் அணிய செய்தார். இலை ஆடைகளுக்கு பதில் பல ஆண்டுகள் பயன் படுத்த கூடிய தோல் ஆடைகள். இந்த தோல் ஆடைகள் செய்ய ஓர் ஆட்டு குட்டி தேவை பட்டது. ஓர் ஆட்டு குட்டியின் தோல் உரிக்க பட வேண்டும். அந்த தோலே ஆடையாய் அம்மனிதருக்கு அணிவிக்கப்பட வேண்டும். அந்த ஆட்டுக்குட்டி, அந்த செம்மறி இயேசுவே.*

*ஏதேன் தோட்டத்தில் தோல் உரிக்கப்பட்ட செம்மறி இந்த கல்வாரி மலை மேலே ஆடையும் அதனுடன் சதையும் உரிக்கப்படுகிறார். என் மீட்பிற்காக, எனக்கு மீட்பு என்னும் ஆடை தர இயேசு தன்னையே இழக்கிறார். எனக்கு வெண்மையான ஆடை தருகிறார். அது ஆட்டு குட்டியின் இரத்தத்தால் துவைக்கப்பட்டது. அதுவே என் இரட்சணியம். ஆறு லட்சத்திற்கும் அதிகமான இஸ்ராயேல் மக்கள் நாற்பது ஆண்டுகள் பாலைநிலத்தில் பயணம் செய்தனர். அந்த நாற்பது ஆண்டுகளும் அவர்கள் மேலுள்ள ஆடைகள் பழையதாய் போக வில்லை. அவர் தம் மக்களை அவர்களே பாதுகாக்கிறார். உடையாக, ஆடையாக பாதுகாப்பு தருகிறார். முதல்தரமான ஆடையை கொண்டு வந்து எனக்கு உடுத்தும் படி செய்கிறார்.*

*இந்த மீட்பு என்னும் ஆடையை தூய்மையாகவும் மதிப்புடனும் அணிந்து ஆண்டவரின் நாளுக்காக ஆயத்தமாய் இருப்பேன்.*

**<u>பதினோரம் நிலை- இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்.</u>**

**<u>சிலுவை மரத்தில்... ஜீவ கனி...</u>**

*நான் இனிமேல் பாவத்திற்கு அடிமையாய் இராத படி என்னுடைய பழைய மனித இயல்பு யேசுவோடு சிலுவையில் அறையப்பட்டு இருக்கிறது. காளைகள் போல் அவரை சூழ்ந்து கொண்டனர். அவரின் எலும்புகள் எல்லாம் கழன்று போயின. அவர் இதயம் மெழுகு போல உருகி உருவிழந்து போயிற்று. அவரின் வலிமை ஓடு போல காய்ந்து போனது. அவர் சாவின் புழுதியில் போடப்பட்டார். அவரின் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள். சிலுவை நாதரின் ஐந்து திருகாயங்களும் என் வாழ்வின் இரட்சணியம். பார சிலுவை மரத்தோடு அதன் கனி இணைக்கபடுகிறது. சாபத்தின் சின்னமாகிய இந்த சிலுவை மரம் இனி உயிர் தரும் மரமாய் மாறியது. கீழ்படியாமையால் பறித்து உண்ணப்பட்ட பழம் இங்கு இயேசுவின் முழுமையான கீழ்படிதலால் சாபம் நீங்கி வாழ்வாக மாறியது.*

*இந்த சிலுவையோடு இணைக்கப்பட்ட ஏசுவால், ஆதியில் வாழ்வின் மரத்திற்கு செல்லும் வழியை காப்பதற்காக வைக்கப்பட்ட கேருபுகளும் சுற்றி சூழலும் சுடரொளி வாளும் எடுக்கப்பட்டது. இனி அந்த கனியை நான் உண்ணலாம். ஏசுவே அந்த மெய்யான கனி. ஏசுவே அந்த சாபம் நீக்கும் உயிருள்ள கனி. நான் இயேசுவின் சிலுவையோடு இணைந்து இருந்தால், திராட்சை செடியாம் யேசுவோடு இணைந்து இருந்தால், மிகுந்த கனி தருவேன். என் ஊனியல்பை அதன் இச்சைகளோடும், இழி உணர்ச்சிகளோடும், சிலுவையில் அறைந்து விட்டேன். இனி என்னில் ஆண்டவர் விரும்பும் அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம் ஆகிய கனிகளே வளரும். சிலுவை மரத்தின் கனி நானே.*

**<u>பன்னிரெண்டாம் நிலை - இயேசு சிலுவையில் தன் உயிரை கையளிக்கிறார்.</u>**

**<u>இயேசுவை உற்று நோக்குவேன்.... வாழ்வு பெறுவேன்</u>**

*அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்து இயேசு 'தாகமாய் இருக்கிறது' என்றார். புளித்த திராட்சை இரசத்தை கடற் பஞ்சில் தோய்த்து ஈசொப்புத் துண்டில் பொருத்தி அவரது வாயில் வைத்தனர். அதை குடித்ததும் இயேசு, 'எல்லாம் நிறைவேறிற்று' என்று கூறித் தலை சாய்த்து தன் ஆவியை ஒப்படைத்தார்.*
*எனக்காக எல்லாம் நிறைவு செய்த ஏசுவே, என் ஆன்மாவின் மேல் தாகம் கொண்டுள்ள ஏசுவே, எனக்காக எல்லோராலும் கைவிடப்பட்ட ஏசுவே, உம் அன்பு பெரிது... உம் அன்பு மாபெரிது.. உம் அன்பை நான் மறந்து விடுவேனோ...மறந்து விடுவேனோ ... மனித பண்பிருந்தால்.... சிலுவை காட்சியை சிந்தையில் நிறுத்துவேன்.*

*உயர்த்த பட்ட இயேசுவை உற்று நோக்குவேன். கடவுளின் வழி நடத்துலுக்கு எதிராக பாலை வனத்தில் இஸ்ராயேல் மக்கள் நடந்தனர். அந்த பாவத்தின் கூலியாக கொல்லி வாய் பாம்புகள் கடிக்கவே பலர் மாண்டனர். அதில் இருந்து விடுதலை பெற, ஆண்டவராகிய கடவுள், வெங்கலத்தில் பாம்பொன்றை செய்து கம்பத்தில் பொருத்தி அதை பார்க்கிற ஒவ்வொருவரும் பிழைப்பர் என்றார். மானிட மகன் இங்கு என் சாபம் எல்லாம் தன் மேல் ஏற்று உயர்த்த பட்டு இருக்கிறார். வெண்கல பாம்பை உற்று நோக்கினவர் வாழ்வு பெற்றனர். இந்த இயேசுவை நம்பிக்கையோடு உற்று நோக்கும் நான் வாழ்வு பெறுவேன்... இயேசுவின் திரு இரத்தம் எல்லா பாவத்தினின்றும் என்னை தூய்மை படுத்தும். இதுவே என் நம்பிக்கை....இதுவே என் விசுவாசம்...இந்த சிலுவையே என் மீட்பு...*

*இனி என் நம்பிக்கைக்கு அடிப்படை இயேசுவின் சிலுவை மரணமே. இயேசுவின் சிலுவை சாவின் வழியாக கடவுள் என்னை தூய்மையாக்கி, மாசற்றவனாக, தன் முன் விளங்க செய்கிறார்.*

*இயேசுவின் இரத்தமே ஜெயம்.*
*இயேசுவின் இரத்தமே ஜெயம்.*

**பதிமூன்றாம் நிலை-இயேசுவின் உடலை அவர் தாயின் மடியில் கிடத்துகிறார்கள்.**

**தாயின் மடியில்... முதல் நற்கருணை விருந்து...**

*நற்கருணை வழிபாட்டின் கடைசி நிகழ்வு. குரு தேவ அப்பத்தை உயர்த்தி, "இதோ கடவுளின் செம்மறி. இவரே உலகின் பாவத்தை போக்குபவர். செம்மறியின் விருந்துக்கு அழைப்பு பெற்றோர் பேறுபெற்றோர்." என இறை மக்களுக்கு அறிக்கை செய்து அழைப்பு விடுக்கிறார். கல்வாரி மலையில் முதல் நித்திய திருப்பலியிலே தூய கடவுளின் குருவாய், மரியா இயேசுவின் உடைக்கப்பட்ட உடலை சுமந்து அகில உலக மக்களுக்கு ஏசுவே பாவம் சுமந்து தீர்த்த ஆட்டுக்குட்டி என்று அறிவித்து அவரில் வாழ அழைக்கிறார். அன்னையின் மடியில் இருப்பது உயிரற்ற ஒரு உடல் அல்ல. அதுவே உயிர் தரும் மெய்யான உணவு. வியாகுல தாய் தன் மகனை நினைத்து அழவில்லை. எனக்காகவே அழுகிறாள். இறை சித்தத்தை முற்றும் ஏற்று தியானித்து வந்தவள், மீட்பின் பேருண்மையை எனக்கு தருகின்றவளாக, கடவுளின் திரு செம்மறியை எனக்கு உணவாக தருகின்றாள்.*

*அன்றொரு நாள், பெத்லகேமில் தம் ஓரே பேரான மகனை துணிகளில் பொதிந்து தீவன தொட்டியில் கிடத்தினார். இன்று அதே திருமகனை மடியில் கிடத்தியவராக உலகிற்கு அடையாளாம் காட்டுகிறாள். இந்த வானக உணவை நான் தகுதியான உள்ளத்தோடு உண்ண வேண்டுமே. ஒவ்வொரு முறையும் திருப்பலியில் நான் அன்னையிடம் இருந்து இயேசுவின் பிட்கபட்ட உடலை வாங்கி செல்கிறேன் என்பதை நான் விசுவாசத்தில் உணருகிறேன்.*

*வியாகுல தாயே, விசுவாச அன்னையே உன் மகனை நான் என் ஆத்துமத்தில் பெரும் போது நான் தகுதியுடன் பெற்றிட எனக்கு பரிசுத்தத்தை பெற்று தா.*

**<u>பதினான்காம் நிலை - இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.</u>**

**<u>விதைக்க படுவது... மாற்றுயிர் பெற...</u>**

*அகில உலகை, அண்ட சராசரங்களை, படைத்த வார்த்தையாம் கடவுள் இங்கு கல்லறையில்.... அரிமத்தியா ஊரை சேர்ந்த யோசேப்பு தனக்கென பாறையில் வெட்டி இருந்த புது கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்.*

*மோசே, மோவாபு நாட்டில் உள்ள பள்ளத்தாக்கில் அடக்கம் செய்யபட்டார். மக்கள் முப்பது நாட்கள் துக்கம் கொண்டாடினர். யோசுவா உரிமை நிலத்தின் எல்லையில் இருந்த திம்னத்செராவில் அடக்கம் செய்யப்பட்டார். தாவீது காலமாகி அடக்கம் செய்யப்பட்டார். அவர் கல்லறை இந்நாள் வரை இருக்கிறது.*

*இது வரை... மனிதன் மண்ணாக இருக்கிறான் மண்ணுக்கே திரும்புவான். முடிந்தது அவன் வாழ்வு. கல்லறையே கடைசி கதி என்றே அழுதனர். பிறப்புக்கு ஒரு காலம் உண்டு. இறப்புக்கு ஒரு காலம் உண்டு என்று காலத்தை நிறைவு செய்தனர். ஆனால் இங்கு உலக வரலாற்றில் ஒரு புதிய காலம் துவங்கி விட்டது.*

*நோவா பேழையை செய்து கொண்டிருந்த நாட்களில், பொறுமையோடு காத்து கொண்டிருந்த கடவுளை ஏற்று கொள்ளாத ஆன்மாக்களை சென்று சந்தித்து தன் மீட்பளிக்கும் நற்செய்தியை பாதாளத்திற்கு சென்று அறிவித்தார். இயேசு ஆண்டவர் முக்காலத்திற்கும் மீட்பை பெற்று தருகிறார்.*

*வரலாற்றை மாற்றவே இயேசு இங்கு அடக்கம் செய்யப்படுகிறார். புது விடியல் ஒன்று இங்கு தொடங்குகிறது. ஒரு கல்லறையின் உடல், மகிமையின் உடலாய், அழிவு காணாமல், விண்ணக சாயலை தாங்கி உயிர் பெற்று எழும் நிகழ்வே இந்த புதிய யுகத்தின் நுழை வாயில்.*

*நானும் ஒரு நாள் விதைக்க படுவேன். அழிவுக்குரியதாய் விதைக்கபடுவது மதிப்புக்குரியதாய் உயிர் பெற்று எழும். மறை பொருள் இதுவே.... நான் சாக மாட்டேன். ஆனால் வேற்றுரு பெறுவேன். அழிவிற்குரிய இந்த உடல் அழியாமையை அணியும்.*

***கடைசியாக…..***

*கல்வாரி சிகரத்தில் இருந்து …நான் மீண்டும் …யாராகத் திரும்புகிறேன்?*

*அன்றைய தங்கள் வேலையை செய்து முடித்து , ஒரு குற்றமற்றவரை கொன்றேன் என்ற உணர்வு இல்லாமல் சென்ற படைவீரர்களாக வா?*

*மதம், சட்டம், பதவி, பட்டம் என்று தங்களையே நீதிமான்களாக கருதி கடின இதயத்தோடு சென்ற பரிசேயராக வா?*

*தூரத்தில் இருந்து அழுது உணர்ச்சி வசப்பட்டு சென்ற எருசலேம் பெண்கள் போலவா?*

*இயேசுவின் இதயத்தை குத்தி அதிலிருந்து வழிந்தோடிய இரத்தத்தாலும் நீராலும் கழுவப்பட்டு சென்ற படைவீரன் போலவா?*

*இயேசுவின் இதயத்தோடு சாய்ந்து வாழ்ந்த அன்பு சீடன் தாயை வீட்டிற்கு அழைத்து சென்றது போல செல்கிறேனா?*

*தன் உள்ளத்தில் எல்லா நிகழ்வுகளையும் தியானித்து உள்ளத்தில் வாள் ஊடுரிவியவளாக கிறிஸ்துவின் உயிர்ப்பை எதிர் நோக்கி காத்திருக்கும் அன்னை மரியாவை போலவா?*

*கல்வாரி சிகரத்தில் இருந்து …நான் மீண்டும் …யாராகத் திரும்புகிறேன்?*



***(for private circulation only – Vijayan.eie@gmail.com)***

எங்கே சுமந்து போறீர்? சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர்
பொங்கும் பகைவராலே, அங்கம் நடு நடுங்க எங்கே போறீர்

1. மனித பாவத்தாலே, மரணத்தீர்வை பெற்று
தூய செம்மறிபோலே, துக்கத்துடன் வருந்தி எங்கே போறீர்

2. பாரச்சிலுவை மரம், பாவத்தின் சுமை தாங்கி
பாசத்துடன் அணைத்து, பாரத்துடன் நடந்து எங்கே போறீர்

3. கல்வாரி மலை நாடி, தள்ளாடி தரை வீழ்ந்து
எல்லோரின் பாவங்களை, தனிமையால் சுமந்து எங்கே போறீர்

4. மாமரி கன்னி அன்னை, மகனின் கோலங்கண்டு
மாதுயருடன் வாடி, மனம் நொந்து வருந்த எங்கே போறீர்

5. உதிரம் ஆறாய் சிந்தி, உள்ள உரமிழந்து
சீரேன் சீமோன் துணையை, ஏற்று வழி நடந்து எங்கே போறீர்

6. கர்த்தரே உம் வதனம், இரத்தக் கறையால் மங்கி
உத்தமி வெராணிக்காள், வெண் துகிலால் துடைத்தும் எங்கே போறீர்

7. பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த, பாரச் சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும் வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்

8. புண்ணிய ஸ்தீரிகள் பலர், புலம்பி அழும் வேளை
ஆறுதல் கூறி நீரும், நேசக்கண்ணீர் சொரிந்து எங்கே போறீர்

9. சிலுவை பாரத்தாலே, மாமரி ஏகமைந்தன்
மூன்றாம் முறை தரையில், முகம் படிந்தெழுந்தும் எங்கே போறீர்

10 நீடாடை கழற்றவே, கோடாகோடிக் காயங்கள்
இரத்தம் ஆறாய் பெருகி, வேதனையால் வருந்தி எங்கே போகிறீர்


11 நீட்டிய கால் கரத்தில், நீண்ட இரும்பாணிகள்
நிஷ்ட யூதர் அறைந்தும், நேசத்திலே வெந்து பலி-யாகினீர்

12 சிலுவை பீடமேறி, மும்மணி நேரந் தொங்கி
அரிய பிதாவை வேண்டி, ஆருயிர் ஒப்படைத்து பலி-யாகினீர்

13 மரி தாய் மடிமீதில், மரித்த மகன் தாங்கி
ஏழு சோக வாட்களால், ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்

14 கர்த்தரின் உடல்தனை, கல்லறைக்குள் அடக்கி
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து எப்போ வருவீர்

15 கல்லறைக்குள் அடங்கா, இறைவனின் மைந்தனே,
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.



# பஸ்காவின் மறைபொருள்
# கிறிஸ்துவின் மரணமும் உயிர்ப்பும்